**OS.No.44/2023, Dated 24.10.2024**

The witness sworn under Oaths Act 1969 on this the 24th day of October 2024

**வா.சா.2 - தனசேகர் த/பெ சின்னதம்பி வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் செய்யாறு தாலுக்காவில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் காழியூர் ஆகும். சொத்து வந்தவாசி தாலுக்கா வடவணக்கம்பாடியில் உள்ளது. எனது குடும்பத்திற்கு சொந்தமான சொத்து வந்தவாசி தாலுக்காவில் இல்லை. எனது ஊருக்கும் தாவா சொத்து உள்ள ஊரிர்கும் சுமார் 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியாது. 2ம் வாதி எனக்கு சகோதரர் முறை ஆகும். தாவா சொத்து யாருக்கு பாத்தியமாக இருந்தது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் சொல்லிதான் தெரியும் நேரடியாக தெரியாது. வழக்கில் உள்ள சொத்து யாருடைய பெயரில் தற்போது உள்ளது என்று எனக்கு தெரியாது. பட்டா மாற்றம் செய்யப்பட்ட பின்னிட்டு தான் எனக்கு விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா கொடுத்ததை ரத்து செய்வதற்காக நான் உடன் சென்றபோது தான் விவரங்கள் தெரியும் என்றாலும் நேரடியாக எனக்கு விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். 1983 ல் கிரையம் வாங்கியதாக 2ம் வாதியின் தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். அவர் 2018 ஆண்டு காலமாகிவிட்டார். அந்த விவரங்களை என்னிடம் அவர் 2000 ம் ஆண்டு வாக்கில் கூறியிருப்பார். கோட்டாட்சியரின் விசாரணையில் நான் ஏதாவது சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் அனுபவம் குறித்து எனக்கு தெரியாது என்றாலும் 2ம் வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆரம்பம் முதலே 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.